# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

********

**முறையீட்டு மனு எண். 45/நகராட்சி/2018**

**நாள் : 22/02/2019**

**திரு ம. மெய்தீன் அப்துல் காதர்,**
**காயல் பட்டணம்.** – முறையீட்டு மனுதாரர்

**நகராட்சி ஆணையர்,**
**காயல்பட்டணம்,**
**செங்கோட்டை மற்றும் கடையநல்லூர் நகராட்சி.** – எதிர் மனுதாரர்கள்

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டணம், சிவன் கோவில் தெரு, 168/ B-5, கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு ம. மெய்தீன் அப்துல் காதர் அவர்களின் 28.03.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 45/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் விசாரணையின் போது அவர் தாக்கல் செய்த வாக்குமூலம் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டணம், சிவன் கோவில் தெரு, 168/ B-5, கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு ம. மெய்தீன் அப்துல் காதர் என்பவர், 09.06.2009 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை எண்.95–இல் அறிக்கை செய்யப்பட்ட 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள், மூன்றாம் நிலை பேரூராட்சிகள் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (பொது வெளிப்பாடு) விதிகளின்படி, தகவல்களை வெளிப்படுத்துதல் சம்பந்தமான நடவடிக்கைகளை நகராட்சிகள் சரியாக பின்பற்றாததால் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களுக்குத் தேவையான தகவல்களைப் பெறமுடியாத நிலை உள்ளதுடன் முறைகேடுகளுக்கு அதிக வாய்ப்பாக அமைகின்றது எனத் தெரிவித்து, அச்சட்டவிதிகளை முறையாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். 23.08.2018 அன்று நடைபெற்ற விசாரணையின் போதும் தனது முறையீட்டினை வலியுறுத்தியுள்ளார்.

2. பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஆகியோரின் நலனுக்காக 09.06.2009 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.95–இல் அறிக்கை செய்யப்பட்ட விதிகள், நகராட்சிகளில் முறையாக செயல் படுத்துவதை உறுதி செய்யக் கோரி முறையீடு செய்துள்ளார். மேற்குறிப்பிட்ட ஆணையில் அறிவிக்கை செய்யப்பட்ட விதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு சுமார் பத்து ஆண்டுகள் ஆகின்றன. இந்நிலையில் பொதுமக்களுக்குத் தேவையான பொதுத் தகவல் விவரங்களை அவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் மேற்குறிப்பிட்ட விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளைத்

தவறாது செயல்படுத்த மாநகராட்சி மண்டல அலுவலர்கள் / ஆணையாளர்கள் / செயல் அலுவலர்கள் ஆகியோருக்கு தக்க அறிவுரைகள் வழங்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஆகியோருக்கு பரிந்துரைத்து ஆணையிடப்படுகிறது.

2019– ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 22–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

**பெறுநர்**

1. நகராட்சி நிர்வாக ஆணையர்,
   சேப்பாக்கம், சென்னை – 600 005.
2. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   குறளகம், சென்னை – 600 108.
3. மாநகராட்சி ஆணையர்,
   பெருநகர சென்னை நகராட்சி,
   ரிப்பன் மாளிகை,
   சென்னை – 600 003.
4. திரு ம. மெய்தீன் அப்துல் காதர்,
   163 / B–5, சிவன் கோவில் தெரு,
   காயல் பட்டணம்,
   தூத்துக்குடி மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி